## III. மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1974ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதிக்கணக்குகள் பின்னிணைப்பு IIIஇன் அட்டவணை 19இற் தரப்பட்டுள்ளன. 1974 திசெம்பர் இறுதியிலுள்ளவாறான கணக்குகளை 1973ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து உள்ள முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு :

| | மொத்தம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) |
|---|---|
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் ... ... | + 356.2 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ... ... ... | + 176.0 |
| கேள்வி வைப்புக்கள் ... | + 163.5 |
| வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | + 16.7 |
| பன்னாட்டு ஒதுக்கு ... ... ... | — 60.5 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் ... | + 545.9 |

+ அதிகரிப்பு — வீழ்ச்சி

இவ்வாண்டு இறுதியில் ஸ்ரேலிங், இந்திய ரூபாய்கள், ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஆகியவற்றிற்கான மத்திய வங்கி வீதங்கள் பின்வரும் முறையில் அமைந்திருந்தன :—

| | தந்தி மாற்றல் கொள்வனவுகள் | தந்தி மாற்றல் விற்பனவுகள் |
|---|---|---|
| ஸ்ரேலிங் (100 உக்கு) உடன்மாற்று | ரூ. 1,559 7/8 | ரூ. 1,561 3/8 |
| பின்மாற்று (ஆறு மாதங்கள் வரை) | உடன்மாற்றுக்கு மாதந்தோறும் ரூபாய் ஒன்றில் 21/32 கழிவு | உடன்மாற்றுக்கு மாதந்தோறும் ரூபாய் ஒன்றில் 21/32 மிகை மதிப்பு. |
| இந்திய ரூபாய்கள் (100 உக்கு) உடன்மாற்று | ரூ. 82 15/16 | ரூ. 83 |
| பின்மாற்று (ஆறு மாதங்கள் வரை) | உடன்மாற்றுக்கு மாதந்தோறும் ரூபாய் ஒன்றில் 1/32 கழிவு | உடன்மாற்றுக்கு மாதந்தோறும் ரூபாய் ஒன்றில் 1/32 மிகை மதிப்பு. |
| ஐ. அ. டொலர்கள் (100 உக்கு) உடன்மாற்று | ரூ. 668.70 | ரூ. 668.95 |
| பின்மாற்று (மூன்று மாதங்கள் வரை)* | * ரூ. 668.70 | உடன்மாற்றுக்கு மாதந்தோறும் 50 சதம் மிகை மதிப்பு. |

* மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் ஆனால், ஆறு மாதங்களுக்கு உட்பட்ட காலத்திற்குள் இலங்கை மத்திய வங்கியிடம் சிறப்பு விண்ணப்பம் செய்யவேண்டும்.

மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் பின்னிணைப்பு IIIஇன் அட்டவணை 24இல் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்கப் பிணைகளையும், வர்த்தக உற்பத்திக்கடன்கள் தொடர்பான சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்களையும் வைத்து வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம், ஆண்டொன்றிற்கு $6\frac{1}{2}$ சதவீதத்தில் எதுவித மாற்றமுமின்றியிருந்தது. உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெற் கொள்வனவிற்கும், உள்ளூரிற் பயிரிடப்பட்ட வேளாண்மைப் பொருட்களின் கொள்வனவு, விற்பனவு அல்லது களஞ்சியப்படுத்தல் என்பவற்றிற்குமான நிதி உதவி செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பாக சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாகக்கொண்டு வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி வழங்கும் முற்பணங்கள் மீதான வட்டிவீதம் ஆண்டொன்றிற்கு 3 சதவீதத்தில் எதுவித மாற்றமுமின்றியிருந்தது. நெல், மரக்கறிகள், ஏனைய சிறப்பான பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தித் தொடர்பாகக் கூட்டுறவுச் சங்கங்களின் சலுகைக் கால வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாகக்கொண்டு வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடம் பெறும் முற்பணங்களின்மீதான வட்டிவீதம் தொடர்ந்தும் ஆண்டுக்கு $1\frac{1}{2}$ சதவீதமாக இருந்தது. ஆனால், இவ்வசதியைப் பயன்படுத்திக்கொள்ளும் வர்த்தக வங்கிகள் வாக்குறுதிச் சான்றிதழ் வரைவோரிடம் ஆண்டிற்கு 8 சதவீதத்திற்கு மேல் (குறித்த திகதிகளில் பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டவிடத்து 3 சதவீதக் கழிவுக்குட்பட்டு) வட்டி அறவிடக்கூடாது. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களுக்கான கழிவுவீதம் கடைசியாக ஏற்கப்பட்ட சராசரிக் கேள்வி வீதத்திலிருந்து ஆண்டொன்றிற்கு $\frac{1}{8}$ சதவீதமாகத் தொடர்ந்திருந்தது.

### வெளிநாட்டு நாணயத் தாள்கள்

மத்திய வங்கி இலங்கையிற் தொழிற்படும் வர்த்தக வங்கிகளிடமிருந்து குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தாள்களைக் குறிக்கப்பட்ட விலைகளில் தொடர்ந்தும் கொள்வனவு செய்துவந்தது. மத்திய வங்கியும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களைக் குறிக்கப்பட்ட விலைகளில் வர்த்தக வங்கிகளுக்கு விற்பனைசெய்தது.

### கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

1974ஆம் ஆண்டில் நெல், மரக்கறிகள், ஏனைய சிறப்புப் பயிர்கள் என்பனவற்றின் உற்பத்திக்காக வர்த்தக வங்கிகளால் கடன்களாக வழங்கப்பட்ட ரூ. 18,52,25,000 கொண்ட தொகைக்கு மத்திய வங்கி உத்தரவாதம் அளித்தது.

### நடுத்தர நீண்டதவணைக் கொடுகடன்

நடுத்தர நீண்டதவணைக் கொடுகடன் திட்டத்தின்கீழ், மத்திய வங்கியினால் கொடுகடன் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீளநிதியிடற் கடன்களின் மீதான வட்டிவீதங்கள் மாற்றமுறாது பின்வரும் முறையில் அமைந்திருந்தன :—

(அ) வேளாண்மை அல்லது கைத்தொழில் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டொன்றுக்கு 6½ சதவீதம்

(ஆ) தேயிலைத் தொழிற்சாலையைப் புதுப்பிக்கவும் புதிய தொழிற்சாலையை அமைக்கவும் தேயிலைக் சட்டுப்பாட்டாளர் வட்டித்தொகையில் ஒரு பகுதியினைக் கொடுக்குங்கால், அத்தகைய கடன்களுக்கு,

i. உள்ளூர் செலவுகளுக்கு ஆண்டொன்றுக்கு 6 சதவீதம்

ii, வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகளுக்கு ஆண்டுக்கு 8 சதவீதம்

(இ) வர்த்தகம், வாணிபம் அல்லது வியாபாரத்தின் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டுக்கு 7½ சதவீதம்

கொடுகடன் நிறுவனங்களுக்கு இவ்வாண்டில் ரூ. 8,915,001 பெறுமதியான மீளநிதியிடற் கடன்கள் வழங்கப்பட்டன.

**நாணய வெளியீடுகள்**

1974ஆம் ஆண்டிறுதியில் சுற்றோட்டத்திலிருந்த மொத்த நாணயம் ரூ. 18,290 இலட்சமாகும். இது, 1973ஆம் ஆண்டிறுதியிலிருந்த தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,760 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. நாணயத்தாள்களின் சுற்றோட்டத்தில் ரூ. 1,679 இலட்சம்கொண்ட அதிகரிப்பும், நாணயக்குத்திகளின் சுற்றோட்டத்தில் ரூ. 81 இலட்சங்கொண்ட அதிகரிப்பும் ஏற்பட்டது. நாணயத்தாள்களின் சுற்றோட்ட அதிகரிப்பிற்கு ரூ. 100, இனத் தாள்களின் அதிகரிப்பு காரணமாயிருக்கையில், குறைந்த இனத் தாள்கள் ஏறக்குறைய அதே நிலையிலிருந்தன.

**வங்கிப் பற்று வரிகள்**

வங்கிப்பற்று வரிகள் சேகரிப்பிற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் பொறுப்பாகவிருந்தது.

**கட்டாய சேமிப்புகள் :**

1971ஆம் ஆண்டின் கட்டாய சேமிப்புச்சட்டம் இல. 6 இன்படி திரட்டப்பட்ட கட்டாய சேமிப்பு நிதியின் பணங்களுக்கும், 1972ஆம் ஆண்டின் வருமான கட்டாய சேமிப்பு மீதான உச்சவரம்புச் சட்ட இல. 15இன்படி திரட்டப்பட்ட பணங்களுக்கும் மத்திய வங்கி தொடர்ந்தும் பாதுகாவலராக விளங்கியதுடன், அரசாங்கத்திற்காகக் கட்டாய சேமிப்பு நிதியை நிருவகித்தும் வந்தது.

**வெளிநாட்டுச் செலாவணி உரிமைச்சான்றிதழ்த் திட்டம் :**

அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தினை மத்திய வங்கி தொடர்ந்தும் நிருவகித்து வந்தது.

**வருமானமும் செலவீடும் :**

மத்திய வங்கியின் இவ்வாண்டு வருமானம் ரூ. 13,19,67.000 ஆகும். ஒதுக்குகளுக்கு வைக்கப்பட்டவையும், வங்கிக்காணி, கட்டடம் அலுவலகத்

தளபாடங்கள் ஆகியவற்றின் பெறுமானத் தேய்விற்காக ஒதுக்கப்பட்டவையும் உள்ளடக்கிய செலவீடு ரூ. 13,09,67,000 ஆகும். நாணயவிதிச் சட்டத்தின் 39 (ஆ) பிரிவின்படி தேறிய இலாபம் ரூ. 1,000,000 மிகைக் கணக்குகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

**வங்கி மேற்பார்வை :**

நாணய விதிச் சட்டத்தின் 29 (1) ஆம் பிரிவின் கீழ் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 1974இல் 8 வர்த்தக வங்கிகளை ஆய்வுசெய்யத் தொடங்கி ஆண்டின் போது 4 வங்கிகளை ஆய்வுசெய்துமுடித்தது.

1970ஆம் ஆண்டின் வங்கிப்பற்று வரிச்சட்டம் இல 27 நிர்வாகத்துடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை இத்திணைக்களம் தொடர்ந்தும் செயலாற்றுவதால் இச்சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட அலுவலாளரின் சான்றிதழ்களில் சமர்ப்பிக்கவேண்டிய தகவலைச் சரிபிழை பார்ப்பதற்காக வர்த்தக வங்கிகள் ஆய்வுசெய்யப்பட்டன.

**அபிவிருத்தி நிதித் திணைக்களம் :**

அபிவிருத்தி நிதித் திணைக்களம், வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒரு பகுதியாக விளங்கிய அபிவிருத்தி நிதிப் பிரிவின் தொழிற்பாடுகளையும், அலவலர்களையும் ஏற்று 1974 சனவரியில் நிறுவப்பட்டது. இப்புதிய திணைக்களம், முக்கியமாக மீளநிதியீடு தொடர்பாக மத்திய வங்கியை நாடும் தனியார் துறை அபிவிருத்தித் திட்டங்களை அளவிடுவதிலும், மதிப்பீடுசெய்வதிலும் ஈடுபட்டுள்ளது. அரசாங்க அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும் வேண்டுகோளின் பேரில் அரசாங்கத் துறைச் செயற்திட்டங்களை மதிப்பீடுசெய்யும் பொறுப்பையும் இத்திணைக்களம் ஏற்றுள்ளது 1974ஆம் ஆண்டில், வங்கிகள் நாடும் மீள நிதியிடற் கடன், முக்கியமாக ஆசிய அபிவிருத்தி வங்கி தேயிலைத் தொழிற்சாலைப் புதுப்பித்தற் கடன்திட்டத்தின் கீழ் தேயிலைத் தொழிற்சாலைகளைப் புதுப்பிக்கவே வழங்கப்பட்டது. இக்கடன் திட்டம் மத்திய வங்கியின் உதவி ஆளுநர் தலைமை தாங்கும் கடன்குழு ஒன்றினால் நிருவகிக்கப்பட்டு அபிவிருத்தி நிதித்திணைக்களத்தினால் கடன்வழங்கப்படுகின்றது. தற்போது இரண்டாவது ஆசிய அபிவிருத்தி வங்கி தேயிலைத் தொழிற்சாலைப் புதுப்பித்தல் கடன் முற்றாகவே வழங்கப்பட்டு மூன்றாவது கடன் பேச்சுவார்த்தைக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வேண்டுகோளுக்கு ஏற்ப, இந்நாட்டிலுள்ள பதிவுசெய்யப்பட்ட எல்லாத் தேயிலைத் தொழிற்சாலைகளிலுமுள்ள இயந்திரங்களின் பாவனைக்காலப் பகுப்பாய்வு உட்பட, தொடக்க வேலையை இத் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது

1967இல் நாணய விதிச் சட்டத்தின் 108ஆம் பிரிவின் கீழ் அரசாங்கச் சார்பில் மத்திய வங்கி, மக்கள் வங்கியினால் நிதியிடப்படும் நெல், காய்கறிகள் ஏனைய குறிக்கப்பட்ட பயிர்கள் தொடர்பான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவந்தது. 1974இல், இக்குறிக்கப்பட்ட பயிர்களுக்காக இலங்கை வங்கியினால் வழங்கப்படும் பயிர்ச்செய்கைக் கடன்களும், கீழ் ஊவா - டெபீரா அறுவேவா திட்டத்தின் கீழ் குடியேறிய விவசாயிகளுக்கு

கற்றன் நஷனல் வங்கியினால் வழங்கப்படும் பயிர்ச்செய்கைக் கடன்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

1974 மார்ச்சில் தேயிலைத் தொழிற்சாலைக்கு வர்த்தக வங்கிகளினால் நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் வழங்குதலை வசதிப்படுத்துவதற்காக அரசாங்கச் சார்பில் கொடுகடன் உத்தரவாதம் ஆரம்பிக்கப்பட்டது. 1964 இன் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் நாட்டை விட்டு வெளியேறுவோருக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட நன்கொடைக் கொடுப்பனவை உள்ளடக்கும் முறையில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. 1974இல் நடைமுறையில் வந்த நாணய விதிச் சட்டம் பிரிவு 108 (அ) சிறு தொழில்முயற்சிகளுக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்படும் கடன்கள் தொடர்பாக மத்திய வங்கி தனது சொந்தமுறையில் கொடுகடன் திட்டங்களைத் தொழிற்படுத்துவதற்கு வழிவகுத்தது. 1974 இறுதி வரை இத்திட்டத்தின் கீழ் ஒருவித கடன்களுக்கும் உத்தரவாதம் அளிக்கவில்லை.

1974 செத்தெம்பரில் பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தில் பங்குபற்றும் வர்த்தக வங்கி முகாமை ஆளணிக்கு இத்திணைக்களம் பயிற்சித் திட்டத்தை நடாத்தியது. இதன்வெளிநாட்டுச் செலாவணியும் உள்ளூர்ச் செலவுகளும் பன்னாட்டு அபிவிருத்திச் சங்கக் கொடுகடனிலிருந்து நிதியிடப்படும், இப்பயிற்சித் திட்டம் இச்செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்குரிய தொடக்க நிலையாகும். இது, திட்ட நடைமுறைப்படுத்தும் அமைச்சின் செயலாளர் தலைமை தாங்கும் செயல்திட்டக் குழுவினால் நிருவகிக்கப்படும். அபிவிருத்தி நிதிப் பணிப்பாளர் இக்குழுவின் அங்கத்தவராவர்.